**செய்தி வெளியீடு எண்:655** **நாள்–12.10.2007**

## செய்தி வெளியீடு

## சுனாமி பாதித்த பகுதி மீனவர்களுக்கு 120 கோடியே 35 இலட்ச ரூபாய் செலவில் கூடுதல் நிவாரண உதவி வழங்கும் திட்டங்கள்

## முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்

-----

தமிழகத்தில் 26.12.2004 அன்று ஏற்பட்ட ஆழிப்பேரலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட கடலோர மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் நோக்கில் 110 கோடியே 36 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் நிவாரண உதவிகள் வழங்கப்படுமென ஏற்கனவே அறிவித்திருந்தார்கள். அந்த அறிவிப்பின்படி பாதிக்கப்பட்ட 40 ஆயிரத்து
794 மீனவர்களுக்குக் கூடுதல் நிவாரணமாகக் கனரக மிதிவண்டிகள், உயிர்காக்கும் கவச உடைகள், குளிரூட்டும் ஐஸ் பெட்டிகள், மீண்டும் எரியூட்டத்தக்க கைவிளக்குகள் ஆகியவற்றை இன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

மேலும் சுனாமி பாதித்த 591 தமிழக கடலோர மீனவ கிராமங்களில் உள்ள மீனவ இளைஞர்கள் / மீனவப் பெண்கள் ஆகியோருக்கு உளவியல் ரீதியாக ஊக்கமளிக்கவும், சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்க உதவிடும் வகையிலும் 59 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கிரிக்கெட் உபகரணங்கள், கைப்பந்து, கால்பந்து, கேரம் போர்டு, சதுரங்க உபகரணங்கள், கபடி மூட்டு உறைகள் ஆகிய விளையாட்டுச் சாதனங்களையும் மீனவர் கிராமத் தலைவர்களிடம் வழங்கும் பணிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

கடலில் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களின் பாதுகாப்பினைக் கருதி, கடல் பகுதியில் எதிர்பாரா வண்ணம் உடல்நலக்குறைவோ அல்லது விபத்தோ ஏற்பட்டால் அங்கு உடனடி சிகிச்சை மேற்கொள்வதற்காக, அவர்களின் படகில் எடுத்துச் செல்லக்கூடிய அளவில் 9 கோடியே 40 இலட்ச ரூபாய் மதிப்பீட்டிலான உயிர்காக்கும் முக்கிய மருந்துகளுடன் கூடிய முதலுதவிப் பெட்டிகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்த மூன்று திட்டங்களின் மூலமும் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணப் பொருள்களின் மொத்த மதிப்பு 120 கோடியே 35 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயாகும்.

இந்நிகழ்வின் போது மீனவளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி.சாமி, மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, நிதித்துறைச் செயலாளர் திரு கு.ஞானதேசிகன், மீன்வளத்துறைச் செயலாளர் செல்வி லீனா நாயர், வருவாய்த்துறைச் செயலாளர் திரு.அம்புஜ் சர்மா, வருவாய் நிர்வாக ஆணையர் திரு.எம்.எப்.பரூக்கி, சுனாமித் திட்ட சிறப்புப் பணி அலுவலர் திரு.சி.வி.சங்கர் ஆகியோர் உடனிருந்தனர்.

******

**வெளியீடு**:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.